## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 469/2010

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW - 1/PW-1 |
| Name | : Meenakshisundaram @ Kannan |
| Father/Husband's Name | : Balakrishnan |
| Village | : No.20 4th street, periyar nagar extension |
| Taluk | : Madipakkam chennai 91 |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.06.2026.

Accused present.

**முதல் விசாரணை–**

இவ்வழக்கு சம்பவத்தின் போது நான் ஜூனியர் வழக்கறிஞராக பணியாற்றி வந்தேன். 27.10.2008 அன்று ஒரு விபத்து ஏற்பட்டது. அந்த விபத்து சம்பந்தமாக முன்பிணை தாக்கல் செய்வதற்காக என்னை அணுகினார்கள். என்னை மணிகண்டன் என்பவர் அணுகினார். எனது சீனியர் மூலமாக மணிகண்டனுக்கு முன்ஜாமின் மனுவை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். அப்போது சுரேஷ் என்பவருக்காக செந்தில் ஏன் முன்ஜாமின் தாக்கல் செய்தீர்கள் என்று என்னை மிரட்டினார். 28.10.2008 அன்று சுமார் மதியம் 1:30 மணி அளவில் நாங்கள் புகார் கொடுத்திருக்கும் போது நீ எப்படி முன்ஜாமின் தாக்கல் செய்யலாம் என்று கூறி உன்னை சும்மா விடமாட்டேன் என்று கூறி செந்தில் என்னை மிரட்டினார். என்னை அம்பேத்கர் சாலைபெரியார் நகர் நான்காவது தெருவில் வைத்து மிரட்டினார் . நீ என்ன பெரிய இதுவா உன்னை சும்மா விட மாட்டேன் தெவிடியா பையா என்று என்னை மிரட்டினார் . சுரேஷ் செந்தில் மிரட்டினார்கள். அவர்களுடன் நான்கைந்து பேர் இருந்தார்கள். ஆஜர்

எதிரி தான் என்னை மிரட்டியை செந்தில்குமார். மற்றொருவரை பார்த்தாலும் என்னால் அடையாளம் காட்ட முடியும் .என்னை செந்தில் குமார் கை ஓங்கி கன்னத்தில் அடித்து தள்ளிவிட்டார். மேலும் அங்கிருந்த நான்கைந்து பேர் என்னை தள்ளி விட்டார்கள். அங்கிருந்த பொதுமக்கள் அவர்களை தடுத்து நிறுத்தினார்கள். சுரேஷ் செந்தில் உடன் வந்தவர்கள் கத்தி போன்ற ஆயுதங்களை வைத்து என்னை மிரட்டினார்கள். நான் நடந்த விவரத்தை எனது சீனியரிடம் கூறினேன். அவர் காவல் நிலையத்தில் புகார் அளிக்குமாறு கூறினார். அதன்படி நான் 29. 10. 2008 அன்று காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். சாட்சியிடம் வழக்கு புகார் காண்பிக்கப்பட்டது. அந்த புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடைய தான் என்று கூறுகிறார். அந்த புகார் தான் காவல் நிலையத்தில் அளித்ததாக கூறுகிறார். அந்தப் புகார் அதசா1 ஆக குறியீடு செய்யப்படுகிறது .போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்ன விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை,**

மணிகண்டன் மீது இருந்த என்ன குற்றச்சாட்டுக்காக முன் ஜாமீன் தாக்கல் செய்தோம் என்றால் மணிகண்டன் ஓட்டி வரும் ஆட்டோ ஸ்டாண்டில் சுரேஷ் காரை ஓட்டி சென்று ஒரு சின்ன குழந்தை மீது மோதுவது போல் சென்றதால் அவர்கள் இருவருக்கும் தகராறு ஏற்பட்டு அது சம்பந்தமாக முன்ஜாமின் தாக்கல் செய்தோம். நான் உங்களை திட்டினேன் என்பதற்கான ஆதாரம் என்ன உள்ளது என்று கேட்டால் அங்கு சம்பவத்தின் போது இருந்த நபர்கள் இவ்வழக்கில் சாட்சியாக உள்ளார்கள். எதிரி வழக்கில் தானாக குறுக்கு விசாரணை செய்வதாக கூறினார் அவருக்கு குறுக்கு விசாரணைக்கான வாய்ப்பு வழங்கப்பட்டது எதிரி வழக்கிற்கு தேவையில்லாத கேள்விகளை கேட்டதாக நீதிமன்றம் கருதியதால் அவரிடம் அதற்கான காரணங்களை கூறுமாறு அறிவுறுத்தப்பட்டது எதிரி பல்வேறு வழக்கிற்கு தொடர்பில்லாத நிகழ்வுகளை கூறிக்கொண்டு நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கும் போக்கில் இருக்கிறார் மேலும் நீதிமன்றம் தேவையான விவரங்களை மட்டும் கூறுமாறு கூறியபோது எதிரி நீதி நீதிமன்றம் கூறுவதை முழுவதுமாக கவனிக்காமல் வாக்குவாதத்தில் ஈடுபடும் போக்கிலேயே செயல்பட்டு வருகிறார். இதே நடவடிக்கையில் தொடர்ந்து எதிரி

ஈடுபடுவதால் அவருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது அவர் சட்டபூர்வமான எந்த விவரங்களும் தெரியாமல் நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கும் வகையில் குறுக்கு விசாரணையை மேற்கொண்டு வருகிறார் எனவே இந்த குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்தி வைக்கப்படுகிறது. சுரேஷ் என்பவரிடம் திருடிய நான்கு பவுன் தங்கச் செயின் சம்பந்தமாக தான் மணிகண்டன் என்பவருக்கு முன்ஜாமின் தாக்கல் செய்யப்பட்டது என்றால் புகார் அவ்வாறு தான் கொடுக்கப்பட்டிருந்தது. நீங்கள் புகார் அளித்த போது மடிப்பாக்கம் காவல் நிலைய அலுவலகத்தில் கமிஷனர் யார் என்று கேட்டால் எனக்கு தெரியாது. எனக்கும் முன்னாள் கமிஷனர் ஜான்கிட் என்பவருக்கும் ஏற்பட்ட மோதலின் காரணமாக அவருடைய தூண்டுதலின் பேரில் ஜான்கிட் என்பவரின் உத்தரவின் அடிப்படையில் என் மீது புகார் கொடுக்கப்பட்டது உண்மையா என்று கேட்டால் அது உண்மை இல்லை எனக்கு அவரை தெரியாது. நான் உங்களை எந்த இடத்தில் உங்கள் உடலில் அடித்தேன் என்று கேட்டால் எனது கன்னத்தில். நான் அடித்ததற்காக மருத்துவமனை சென்றேனா என்று கேட்டால் காயங்கள் ஏதும் இல்லாததால் நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. நான் இவ்வழக்கில் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் தவறு. என்னுடன் இருந்த நான்கு நபர்கள் யார் யார் என்று கேட்டால் அந்த சமயத்தில் எனக்கு தெரியாது பின்னிட்டு அவர்களது விவரத்தை தெரிந்து கொண்டேன் ஸ்டாலின் மற்றவர்கள் விவரம் தெரியவில்லை .

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.